# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2450/27- 2025 අගෝස්තු මස 20 වැනි බදාදා - 2025.08.20

2450/27 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்*

**சனாதிபதியின் பணிப்புரை**

முத்திரை

*அநுர குமார திசாநாயக்க*

இலங்கையின் சுற்றுலா அபிவிருத்திப் பணி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சனாதிபதி செயலணியொன்றைத் தாபித்தல்.

1. கௌரவ வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்
2. கௌரவ சுற்றுலா பிரதி அமைச்சர்
3. சனாதிபதியின் செயலாளர்
4. செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
5. செயலாளர், பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
6. செயலாளர், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு
7. செயலாளர், சுற்றாடல் அமைச்சு
8. செயலாளர், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
9. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
10. மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), சுற்றுலாப் பிரிவு, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு
11. தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபை


103 - G 45189 - 05 (2025/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

12. தலைவர், இலங்கை அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்
13. தலைவர், இலங்கைச் சுற்றுலா, ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்
14. பணிப்பாளர் நாயகம், மத்திய கலாசார நிதியம்
15. பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு திணைக்களம்
16. பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம்
17. பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
18. பணிப்பாளர் நாயகம், வனப் பாதுகாப்புத் திணைக்களம்
19. பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
20. குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்
21. பணிப்பாளர் நாயகம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை
22. பொலிஸ் மா அதிபர், இலங்கைப் பொலிஸ்
23. திரு. துமிந்த ஹுலங்கமுவ அவர்கள்
24. திரு. கிரிஷான் பாலேந்திர அவர்கள்
25. திரு. நிஹால் முகந்திரம் அவர்கள்
26. திரு. நலின் ஜயசுந்தர அவர்கள்
27. திரு. சுரஞ்சித் வேவிட்ட அவர்கள்
28. திருமதி ஷிரோமால் குரே அவர்கள்

ஆகியோருக்கு,
வாழ்த்துக்கள்!

அரசாங்க துறைசார்ந்த நிறுவனங்கள் மற்றும் அரசாங்க தனியார் கூட்டாண்மை அமைப்புகள் இந்த சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் முக்கிய ஊக்குவிப்பாளராக பணியாற்றுவதால், தற்போதுள்ள நிறுவனங்களை முறையாக ஒருங்கிணைத்தல் மற்றும் துறையில் விரைவான மாற்றத்தை ஊக்குவிப்பதற்காக அரசாங்க, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் அர்ப்பணிப்புடன் கூடிய, அதிகாரமளிக்கப்பட்ட பொறிமுறையொன்றினதும் விசேட வேலைத்திட்டமொன்றினதும் அவசியம் அரசாங்கத்தால் இனங்காணப்பட்டுள்ளதாலும்,

வளமான நாடு, அழகான வாழ்க்கை எனும் கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம், "நவீன சுற்றுலாக் கைத்தொழில் – கவர்ந்திழுக்கும் பயணமுடிவிடம்" என்பதன் கீழ் வளமான நாட்டை உருவாக்குவதில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்காக அது சார்ந்து மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் மூலம் பொதுமக்களின் அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புகளையும் உடனடியாக அடைய வேண்டியதன் அவசியம் தற்போதைய அரசாங்கத்தின் முதன்மையான கவனத்தைப் பெற்றுள்ளதாலும்,

மிகவும் இலகுவாக மற்றும் துரிதமாக அந்நிய செலாவணியை உழைக்கும் ஆற்றலுள்ள சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கான மூலோபாய வேலைத்திட்டம் ஒன்றை சரியான முறையில் விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்தால் இனங்காணப்பட்டுள்ளதாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சனாதிபதி செயலணியை தாபிப்பதுடன் தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும்கொண்டு, மேற்சொல்லப்பட்ட உங்களை, அதாவது,

1. கௌரவ வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்
2. கௌரவ சுற்றுலா பிரதி அமைச்சர்
3. சனாதிபதியின் செயலாளர்
4. செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
5. செயலாளர், பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
6. செயலாளர், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு
7. செயலாளர், சுற்றாடல் அமைச்சு
8. செயலாளர், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
9. செயலாளர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
10. மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), சுற்றுலாப் பிரிவு, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு

11. தலைவர், நகர அபிவிருத்தி அதிகாரசபை
12. தலைவர், இலங்கை அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்
13. தலைவர், இலங்கைச் சுற்றுலா, ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்
14. பணிப்பாளர் நாயகம், மத்திய கலாசார நிதியம்
15. பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு திணைக்களம்
16. பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம்
17. பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
18. பணிப்பாளர் நாயகம், வனப் பாதுகாப்புத் திணைக்களம்
19. பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
20. குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்
21. பணிப்பாளர் நாயகம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை
22. பொலிஸ் மா அதிபர், இலங்கைப் பொலிஸ்
23. திரு. துமிந்த ஹுலங்கமுவ அவர்கள்
24. திரு. கிரிஷான் பாலேந்திர அவர்கள்
25. திரு. நிஹால் முகந்திரம் அவர்கள்
26. திரு. நலின் ஜயசுந்தர அவர்கள்
27. திரு. சுரஞ்சித் வேவிட்ட அவர்கள்
28. திருமதி ஷிரோமால் குரே அவர்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு மற்றும் ஏனைய எழுதப்பட்ட சட்டங்களில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ், கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்குறித்த சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக நியமிக்கின்றேன்.

**மேற்குறித்த பணிகளாவன**

**1. கொள்கைப் பகுப்பாய்வு, மூலோபாய திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் ஒழுங்குறுத்துகை**

i. விசேட நிபுணத்துவம் தேவைப்படும் குறிப்பிட்ட கொள்கை பிரச்சினைகள் தொடர்பான கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் பரிந்துரைகளை வழங்குதல். சுற்றுலாத்துறை சார்ந்த நிபுணர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் மற்றும் நிலவும் சூழ்நிலையின் அடிப்படையில், சுற்றுலா செயற்பாடுகளை முகாமை செய்தல், ஊக்குவித்தல், கலாச்சார மரபுரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றுக்காக மூலோபாய கட்டமைப்பு ஒன்றை இனங்காணுதல் மற்றும் ஏற்புடைய நிறுவனங்களுக்கு அந்த மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.

ii. சுற்றுலா ஐந்தாண்டு (05) திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் பொருட்டு ஏற்புடைய தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்ட அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பின் மூலம் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு உயர் மட்ட தேசிய தலையீட்டினை மேற்கொள்ளல்.

iii. கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் திட்டங்களை தனியார் துறை உட்பட பல்வேறு பங்கீடுபாட்டாளர்களின் பங்கேற்புடன் அபிவிருத்தி செய்தல்.

iv. தலைமைத்துவ/தீர்மானங்களை மேற்கொள்ளும் மட்டங்களிலான பொது-தனியார் கூட்டாண்மைகளுடனான நிறுவனங்கள், அரசாங்க கொள்கைகள், முன்னோக்குகள், அரசாங்க பொறுப்புக்கூறல் மற்றும் ஊக்குவிப்புடனான சுற்றுலாத்துறைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் மனித வள அபிவிருத்தி

v. சுற்றுலாத் துறை ஆய்வுகள் மற்றும் அதனை ஒத்த செயல்பாடுகளை நடத்துவதற்கான வழிகாட்டல்.

vi. பயனுறுவான சுற்றுலாத்துறை ஒழுங்குறுத்துகை மற்றும் அனைத்து முறைசாரா பங்கீடுபாட்டாளர்களையும் முறைப்படுத்தல்.

**2. சவால்களை இனங்காணல் மற்றும் தீர்வுகளை முன்மொழிதல்**

i. துறையின் சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களுக்கு பதிலளிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனப் பொறிமுறை ஒருங்கிணைப்பு.

ii. நிதி முகாமைத்துவம், பெறுகை, மனித வள முகாமைத்துவத்திற்கான செயல்முறைகள் மற்றும் முறைமைகளை தயாரித்தல்.

iii. நிறுவன செயற்பாடுகளுக்காக தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், மென்பொருள் முறைமைகளின் வலையமைப்பு இருப்பை உறுதி செய்வதற்காக உடனடியாக தொழில்நுட்ப செயலூக்கமான/தன்னியக்க, எளிமையான மற்றும் வெளிப்படையாக தென்படும் முறைமைகளை நிறுவுதல்.

iv. ஏற்புடைய சுற்றுலா பயணமுடிவிடங்களின் சேவைகள் மற்றும் விருந்தோம்பல் தகவல்களை எளிதாக அணுகுவதற்கு இணைய மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் ஏற்புடைய பணிகளை நிறைவேற்றல்.

v. சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்காக சர்வதேச தரத்துடனான கட்டணம் செலுத்தி சிகிச்சையைப் பெறக்கூடிய நோயாளர் விடுதிகளுடன் கூடிய இனங்காணப்பட்ட மருத்துவமனைகளை மேம்படுத்துதல்.

vi. ஒட்டுமொத்த கட்டமைப்பை மேலும் எளிமைப்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள், நிறுவனங்களுக்கிடையேயான பொறுப்புகளில் உள்ள எந்தவொரு மேவிச்செல்லுகை (overlapping) தொடர்பாகவும் எடுத்துரைத்து தீர்த்தல்.

vii. நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்புக்காக நன்கு நிறுவப்பட்ட பொறிமுறைகளுடன், செயலூக்கமாக, சுயாதீனமாக நிறுவனங்களுக்கிடையே தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ள வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.

viii. சுற்றுலா நிறுவனங்களுக்கு கிடைக்கும் நிதியங்களுக்கு மேலதிகமாக வளங்களைத் திரட்டுதல்.

ix. அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறைகள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களுடனான ஒருங்கிணைப்பு.

x. மனிதவள பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்திக்காக இலங்கைச் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு வழிகாட்டல்களை வழங்குதல்.

xi. புத்தாக்க சுற்றுலா உற்பத்திகளை உருவாக்குவதற்காக ஒட்டுமொத்தமாக நீண்ட கால பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்வாழ்வை பின்பற்றுகின்ற பொருளாதார வளர்ச்சியில் உள்ளடங்கும் புத்தாக்க சுற்றுலா உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். (Inclusive economic growth/innovative tourism product development)

xii. முறைசாரா சுற்றுலா சேவை வழங்குநர்களை முறை சார் துறைக்கு உள்ளீர்ப்பதற்காக அனைத்து சுற்றுலா நிறுவனங்களின் நியமங்கள் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக முறைசாரா சுற்றுலா சேவை வழங்குநர்களை முறை சார் துறைக்கு உள்ளீர்ப்பதற்காக சுற்றுலா விருந்தோம்பல் மற்றும் சேவை வழங்குநர்களை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் தொடர்பான வினைத்திறனை அதிகரித்தல்.

xiii. அதற்குத் தேவையான முறைமைகளை உருவாக்குதல் மற்றும் சுற்றுலாத் துறையில் வணிக டிஜிட்டல் தளங்கள் மற்றும் செயலிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான ஒழுங்குறுத்துகை கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல் மற்றும் நியமங்களுக்கு ஏற்ப செயற்பாடுகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்தல். (license commercial digital platforms and Apps in tourism industry, it will enable collection of TDL from such commercial platforms.)

xiv. சுற்றுலாத் துறையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு அவசியமென குழு தீர்மானிக்கும் எந்தவொரு விடயத்திலும் தலையீடு செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**3. மேற்பார்வை மற்றும் மதிப்பீடு**

i. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், இலங்கைச் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் மற்றும் இலங்கை சம்மேளன பணியகம் உள்ளிட்ட சுற்றுலாத்துறையில் உள்ள அனைத்து நிறுவனங்கள் மற்றும் அவர்களின் நீண்டகால மூலோபாயத் திட்டங்களுடன் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள அவர்களின் வருடாந்த திட்டங்களின் முக்கிய பணிகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதை உறுதிப்படுத்தல் மற்றும் பொருத்தமான மேற்பார்வை மூலம் சரியான திசையில் முன்னிலைப்படுத்துதல் மூலம் அபிவிருத்தி, ஒழுங்குறுத்துகை, விளம்பரப்படுத்துதல், மனித வள அபிவிருத்தி மற்றும் அதன் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் எதிர்பார்க்கப்படுகின்ற இலக்குகளை அடைய மேலும் வலுவான அரசாங்கங்களுக்கிடையேயான பொறிமுறை ஒன்றின் ஆதரவை வழங்குதல் மற்றும் அது தொடர்பான மேற்பார்வை.

ii. சுற்றுலா சேவை வழங்குநர்களுக்கு விருந்தோம்பல் சேவைகள் மற்றும் சுற்றுலா விடுதிகளை பதிவு செய்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடமாடும் சேவைகள் நடத்தப்படுவதை மேற்பார்வை செய்தல்.

**4. பிரதேச மட்டம் வரை விரிவாக்கம் செய்தல்**

i. குறிப்பிட்ட உறுப்பினர்கள், குறிப்பிட்ட விசாரணை நியதிகள் மற்றும் காலச்சட்டகத்துடன் குறிப்பிட்ட குழுக்களை மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் நிறுவுதல். இந்தக் குழுக்களில் அரச துறை மற்றும் தனியார் துறையின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல்.

ii. சுற்றுலாத்துறையுடன் நேரடியாக தொடர்புடைய தற்போதுள்ள முறையியல்களில் உள்ள குறைபாடுகளை இனங்காணுதல் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்தல் பொருட்டு தற்போதுள்ள விநியோகச் சங்கிலிகளை பகுப்பாய்வு செய்து ஆலோசனைகளை வழங்குதல்.

iii. அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களின் ஊடாக (மத்திய/மாகாண/மாவட்ட மற்றும் பிரதேச) ஒத்துழைப்பு மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

**5. கவர்ந்திழுக்கும் பயணமுடிவிடங்களுக்கான வசதிகளை விரிவாக்கல்**

i. அனைத்து விருந்தினர்களுக்கும் தடையற்ற, கவர்ந்திழுக்கும் மற்றும் பாதுகாப்பான சூழலை உறுதி செய்து, மகிழ்ச்சியை மேம்படுத்தி, எமக்கு உரித்தான விருந்தோம்பல் முகாமைத்துவத்தின் சிறந்த நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு விரிவான விருந்தோம்பல் அனுபவ மாதிரியை (visitor experience model) அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

ii. கவர்ந்திழுக்கும் பயணமுடிவிடத்தை உறுதி செய்வதற்காக முகாமைத்துவ மற்றும் இணைப்பு வலையமைப்புகளைக் கட்டியெழுப்புதல். (Destination management and connectivity).

iii. சுற்றுலா பயணமுடிவிடங்களின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்காக அரச மற்றும் தனியார் துறைகளுக்கு இடையே ஒத்துழைப்புடன் பணியாற்றி பயணமுடிவிடங்களை இனங்காணுதல், முகாமை செய்தல், சந்தைப்படுத்தல் மூலோபாயங்கள் மற்றும் எதிர்மறை தாக்கங்களைக் குறைத்து அதிகபட்ச நன்மைகளை நோக்கமாகக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

iv. அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல், பயணமுடிவிட மட்டத்தில் வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் செயலூக்கப்படுத்துதல் மற்றும் தடையற்ற நீண்ட தூர போக்குவரத்து இணைப்புகளை செயலூக்கப்படுத்துதல், தனியார் துறை கருத்திட்டங்களில் பாரிய முதலீட்டு மீளாய்வு செய்தல் மற்றும் தங்குமிட சொத்துக்கள் மற்றும் சுற்றுலா விநியோகச் சங்கிலி மூலம் நிலைபேறான தன்மையை உருவாக்குதல்.

v. பிரதான சுற்றுலா நகரத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல் (நுவரெலியா, ஹிக்கடுவை, நீர்கொழும்பு, கற்பிட்டி).

vi. சமுத்திர சுற்றுலா திட்ட வரைபடம் மற்றும் மூலோபாயத் திட்டத்தை ஆரம்பித்தல். (Marine Tourism Roadmap & Strategic Plan).

**6. நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தி**

i. சீகிரியா மற்றும் ஏனைய சுற்றுலா வலயங்களில் சர்வதேச நியம அடையாளங்கள் மற்றும் குறியீடுகளை செயற்படுத்துதல் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பயணமுடிவிடங்களாக சர்வதேச நியமமாக்கலை பெற்றுக்கொள்ளல்.

**7. சுற்றுலா ஊக்குவிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல்**

i. இலங்கையின் சுற்றுலா ஊக்குவிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தலை அதிகரிப்பதற்காக நிகழ்நிலை சுற்றுலா முகவர் நிறுவனங்களுடன் (OTA) மூலோபாய தொடர்புகளின் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல். (Strategic Engagement with Online Travel Agencies (OTAs) to boost Sri Lanka’s Visibility)

ii. வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதுக்குழுக்கள் மற்றும் தூதரகங்களுடன் சுற்றுலா ஊக்குவிப்புக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

iii. சுற்றுலா உற்பத்திகள் மற்றும் விநியோகச் சங்கிலிகளை மேம்படுத்தல்.

iv. புதிய சந்தைகள் மற்றும் சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதற்காக சுற்றுலா விளம்பரப்படுத்தல் ஊக்குவிப்பு.

v. சுற்றுலா நிறுவனங்களை அனைத்து சந்தை இலக்குகளின் அடிப்படையில் பயனுறுவாக போட்டியிட தயார்ப்படுத்தல்.

vi. உலகளாவிய சுற்றுலா அமைப்புகளுடன் வலுவான உறவுகளை கட்டியெழுப்புதல்.

மேலும், மேற்குறித்த சனாதிபதி செயலணியின் தலைவராக கௌரவ வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரையும் உபதலைவராக கௌரவ சுற்றுலாத்துறை பிரதி அமைச்சரையும் நியமிக்கின்றேன்.

மேலும், குறித்த செயலணியின் செயலாளராக வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரை நியமிக்கின்றேன்.

மேலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு மற்றும் ஏனைய எழுதப்பட்ட சட்டங்களில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ், இத்தால் ஒப்படைக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையானவாறு விடயங்களை விசாரிப்பதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் சனாதிபதி செயலணி கருதும் அரச உத்தியோகத்தர்களின் உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கும் சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாகிய உங்களுக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

மேலும், எவரேனும் அரச ஊழியர் அல்லது ஏதேனும் அமைச்சு, அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் அல்லது வேறு அத்தகைய நிறுவனம் ஒன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறித்த செயலணி மூலம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றத் தாமதிக்கும் அல்லது நிறைவேற்றத் தவறும் அனைத்து சந்தர்ப்பங்கள் பற்றியும் எனக்கு அறிக்கையிடுமாறு மேற்குறித்த செயலணிக்கு இத்தால் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாகிய நீங்கள் மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவ்வப்போது எனக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலும், மேற்குறித்த செயலணி மூலம் இரண்டு (02) ஆண்டு காலத்திற்குள் மேற்குறித்த பணிப்புரைகளுடன் தொடர்புடைய கடமைகளை நிறைவேற்றி ஏற்புடைய அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டுமெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆம் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் கொழும்பில் அளிக்கப்பட்டது.

கௌரவ சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

**கலாநிதி என்.எஸ்.குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

EOG 08 - 0222

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.